பாடம் 5

# உடைக்கப்பட்ட கற்பலகைகள்

***நீ செய்த தவறுக்காக உன் பெற்றோரிடமோ நண்பரிடமோ மன்னிப்புக்கேட்டது உண்டா? மன்னிப்பது எளிதான ஒன்றா? தேவனுடைய இதயத்தை இஸ்ரவேலர்கள் உண்மையிலேயே நோகப்பண்ணினார்கள். தேவனிடம் மன்னிப்புப் பெறவேண்டிய நிலையில் இருந்தார்கள். என்னவென்று பார்ப்போமா?***

சீனாய் மலையிலே பத்துக் கற்பனைகளைப் பேசிய பின்னர் தேவன், மோசேயை மலையில் ஏறி தம்மிடம் வருமாறு அழைத்தார். தேவன் நீண்ட நேரம் மோசேயிடம் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பத்துக்கற்பனைகளையும் மோசேயிடம் விபரமாகக் கூறினார். இரண்டு பெரிய கற்பலகைகளில் தமது சொந்த விரல்களால் தேவனே பத்துக் கற்பனைகளையும் எழுதினார்.

மோசே தேவனிடம் மலையில் பேசச்சென்று 40 நாட்கள் ஆகிவிட்டது. எனவே, மோசே இனி, திரும்பிவரமாட்டார் என்று இஸ்ரவேலர் நினைத்தார்கள். எனவே, அவர்கள் ஆரோனிடம் வந்தார்கள்.

ஆரோனிடம் ''மோசே நம்மை விட்டுச் சென்று அதிக நாட்களாகிவிட்டது. எங்களை எகிப்திலிருந்து அழைத்துவந்த அந்த மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை. எனவே, நீர் எங்களை வழிநடத்த எங்களுக்காக தெய்வங்களை உண்டு பண்ணும்'' என்றனர்.

இஸ்ரவேலர் அவ்வாறு கேட்பது தவறு என்று தெரிந்தும் ஆரோன் அவர்களுக்குப் பயந்தார். எனவே, ''நீங்கள் வீட்டிற்குப் போய் உங்கள் மனைவி, பிள்ளைகளிடமிருந்து தங்கநகைகளை வாங்கிவாருங்கள்'' என்று கூறினார். இஸ்ரவேலர் தங்களது தங்கநகைகளையெல்லாம் கழற்றி ஆரோனிடம் கொடுத்தார்கள்.

ஆரோன் அந்தப் பொன் நகைகளைக் கொண்டு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தார்.



## மனன வசனம்

**ஆண்டவரே, நீர் நல்லவரும் மன்னிக்கிறவருமாயிருக்கிறீர்.**
**சங்கீதம் 86:5.**

“உங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த தெய்வங்கள் இவைகளே’ என்று இஸ்ரவேலரிடம் கூறினார்.

ஆரோன் அவர்களிடம், ‘நாளைக்கு கர்த்தருக்குப் பண்டிகை” என்றார். இஸ்ரவேலர் மிகவும் சந்தோஷம் கொண்டார்கள்.

மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து சர்வாங்க தகனபலிகளை இட்டனர். சமாதான பலி செலுத்தினர். மிகவும் ஜாலியாக இருந்தார்கள். புசித்தார்கள், குடித்தார்கள், ஆடினார்கள், பாடினார்கள்; ஆனால் தேவாதி தேவனை மட்டும் நினைக்கத் தவறினார்கள்.

இவற்றைக் கண்டு தேவன் மிகவும் வேதனை அடைந்தார். தேவன் மோசேயை நோக்கி, “நீ இறங்கிப் போ; நீ அழைத்து வந்த ஜனங்கள் தங்களைக் கொடுத்துக் கொண்டார்கள். நான் அவர்களுக்குக் கொடுத்த கற்பனையை மீறிவிட்டார்கள். தங்களுக்கு ஒரு கன்றுக் குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு அதற்குப் பலியிடுகிறார்கள். எகிப்திலிருந்து தங்களை அழைத்து வந்த தெய்வங்கள் இவைகளே என்று சொல்கிறார்கள்” என்றார்.

தேவன் சொல்லியபடி மோசே வேகமாகக் கீழே இறங்கிச்சென்றார். தேவன் தமது சொந்த விரலினால் எழுதித்தந்த பத்துக்கற்பனைகள் அடங்கிய இரண்டு பெரிய கற்பலகைகளையும் தம் கையில் எடுத்துக்கொண்டு வந்தார். மோசேக்காக மலையிலே காத்திருந்த யோசுவா மோசே மலையிலிருந்து இறங்குவதைக் கண்டு மனம் மகிழ்ந்தார். அவர் மோசேயிடம், “பாளயத்தில் யுத்தத்தின் இரைச்சல்



## செய்தி

**நம்மை மன்னிப்பதற்கு தேவன் எப்போதுமே ஆய்த்தமாயிருக்கிறார்.**

கேட்கிறது'' என்றார். மோசே வேதனையுடனும் கோபத்துட னும், ''அது பாடலின் தொனி'' என்று யோசுவாவிடம் கூறினார்.

இஸ்ரவேலர் கன்றுக்குட் டியை வழிபட்டதைப் பார்த்து மோசே வெகுண்டார். தன் கையில் வைத்திருந்த கற்பல கைகளை மலையின் அடியிலே எறிந்து உடைத்துப்போட்டார்.

கன்றுக்குட்டியை எரித்து, பொடியாக அரைத்து தண்ணீரில் தூவி, அத்தண்ணீரை அவர்கள் குடிக்கும்படிச் செய்தார். தேவ னிடம், இஸ்ரவேலரை மன் னிக்குமாறு மோசே கெஞ்சி னார். தேவனும் அன்பாக மன்னித்தார். செல்லமே, நாம் மனம்வருந்தி தேவனிடம் மன்னிப்புக் கேட்டால் நம் பாவங்களை மன்னிப்பார்.

*செய்முறை:* **தேவனுடைய கற்பனைகளை இஸ்ரவேலர் மீறியதால் மோசே கோப மடைந்து தேவன் எழுதித்தந்த கற்பலகைகளை உடைத்துப்போட்டார். கீழ்க்காணும் கற்குவியலுக்குள் 2 கற்பலகைகள் மறைந்துகிடக்கின்றன. அதில் 1,2 எனக் குறித்து, அதைச்சுற்றி வட்டமிடு. மீண்டும் அதில் கற்பனைகளை எழுத மோசேக்கு உதவு.**

**புதிர் 5**

